International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 • 4 October • December 2026

Published on 14, Oct - Dec 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

கால உளவியல் நோக்கில் சீறாப்புராணம்

அ. முகம்மது பதுருதீன்
முனைவர்பட்ட ஆய்வாளர்

முனைவர் இரா. கண்ணதாசன்
நெறியாளர்-துறைத்தலைவர்-இணைப்பேராசிரியர்-தமிழ்த்துறை
உயராய்வுமையம், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை-630 303 (அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி இணைவு பெற்றது)

ஆய்வுச் சுருக்கம்

காலம் என்பது வெறும் கடிகார முட்களின் சுழற்சி மட்டுமன்று; அது மனித உளவியலின் ஆழத்தில் நிகழும் ஒரு நுட்பமான உணர்வுப் பிரதிபலிப்பு. புகழ்மிக்க உளவியலாளர் பிலிப் சிம்பார்டோ (Philip Zimbardo) தனது 'The Time Paradox' (2008) நூலில் காலத்தை நோக்கும் மனித மனநிலையை ஆறு பரிமாணங்களாக வகைப்படுத்துகிறார். இந்த ஆய்வுக்கட்டுரை, 17ஆம் நூற்றாண்டில் உமறுப் புலவரால் இயற்றப்பட்ட தமிழ் இஸ்லாமியப் பெருங்காப்பியமான சீறாப்புராணத்தை சிம்பார்டோவின் கோட்பாட்டு நோக்கில் ஆய்வு செய்கிறது. விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் இடம்பெறும் கதாபாத்திரங்களின் மனநிலைகள், முடிவெடுக்கும் திறன், சமூக நடத்தை ஆகியவற்றை கால உளவியல் கண்ணோட்டத்தில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இவ்வாய்வு தமிழ் இலக்கியத்திற்கும் நவீன உளவியல் அறிவியலுக்குமிடையே ஒரு புதிய உரையாடலை நிறுவுகிறது.

முதன்மைச் சொற்கள்

கால உளவியல், பிலிப் சிம்பார்டோ, மறுமை நோக்கு.

முன்னுரை

காலம் என்பது வெறும் கடிகார முட்களின் சுழற்சியோ அல்லது நாட்காட்டியின் கிழிபடும் தாள்களோ மட்டுமல்ல; அது மனித மனதின் ஆழமான உணர்வுகளோடும், அவர்தம் செயல்பாடுகளோடும் பின்னிப் பிணைந்த ஒரு நுட்பமான உளவியல் கட்டமைப்பாகும். இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி என்றால், அக்காலத்தை மனித மனம் எவ்விதம் எதிர்கொண்டது என்பதை விவரிப்பதே காப்பியங்களின் அடிப்படைப் பண்பாகும். அந்த வகையில், 17ஆம் நூற்றாண்டில் உமறுப் புலவரால் இயற்றப்பட்ட தமிழின் ஒப்பற்ற இஸ்லாமியப் பெருங்காப்பியமான சீறாப்புராணம், இறைத்தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வியலை வெறும் வரலாற்றுப் பதிவாக மட்டும் முன்வைக்காமல், ஒரு சிறந்த கால உளவியல் பெட்டகமாகவும் திகழ்கிறது.

நவீன உளவியலாளர் பிலிப் சிம்பார்டோ (Philip Zimbardo) காலத்தை நோக்கும் பார்வையை ஆறு நிலைகளாகப் பகுக்கின்றார். இக்கோட்பாட்டின் அடிப்படையில் சீறாப்புராணத்தை அணுகும்போது, அதில் இடம்பெறும் மாந்தர்களின் மனநிலை, அவர்கள்

எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றில் பொதிந்துள்ள காலஉணர்வை தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

சீறாப்புராணத்தின் மூன்று காண்டங்களும் காலத்தின் வெவ்வேறு பரிமாணங்களை நமக்கு உணர்த்துகின்றன

விலாதத்துக் காண்டம் கடந்த காலத்தின் நல்வாசனையையும் ஒரு நற்பெருக்கின் தொடக்கத்தையும் ஏந்தி நிற்கிறது.

நுபுவ்வத்துக் காண்டம் நிகழ்காலத்தின் போராட்டங்களையும் இறைத்தூது கிடைப்ப தற்கான காத்திருப்பின் உளவியலையும் விவரிக்கிறது.

ஹிஜ்ரத்துக் காண்டம் எதிர்காலத்திற்கான திட்டமிடல் மற்றும் இடப்பெயர்வு சார்ந்த கால மாற்றத்தை முன்னிறுத்துகிறது.

தமிழ் இலக்கிய மரபையும், இஸ்லாமிய வாழ்வியல் விழுமியங்களையும் காலத்தின் தத்துவார்த்தப் பின்னணியில் ஆராயும் ஒரு புதிய முயற்சியாக இந்த ஆய்வு அமைகிறது.

பிலிப் சிம்பார்டோவின் கால உளவியல் கோட்பாடு

மனித வாழ்வின் ஒவ்வொரு முடிவையும், செயல்பாட்டையும் தீர்மானிப்பது அவர்கள் காலத்தை எவ்விதம் உணர்கிறார்கள் என்பது தான். காலம் என்பது கடிகாரத்தால் அளவிடப்படும் ஒரு பொதுவான அளவீடாக இருந்தாலும், ஒவ்வொரு மனிதனும் அதனைத் தன் மனதளவிலும் உணர்வளவி லும் வெவ்வேறு விதமாகவே கையாள்கிறான். இதனை விளக்கும் புகழ்பெற்ற உளவிய லாளர் பிலிப் சிம்பார்டோ, தனது 'The Time Paradox' (2008) நூலில் காலத்தை நோக்கும் பார்வையை ஆறு நிலைகளாக வகைப் படுத்துகிறார். அவர் தனது நூலில்

எதிர்மறை கடந்த காலம்

கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்கள், தோல்விகள் அல்லது இழப்புகளை மட்டுமே மீண்டும் மீண்டும் நினைத்து வருந்துவது. இது ஒருவரைத் தேக்க நிலையிலேயே வைத்திருக்கும்.

நேர்மறை கடந்த காலம்

கடந்த காலத்தின் இனிய நினைவுகள், குடும்பப் பாரம்பர்யம், பண்பாடு மற்றும் வெற்றிகளை நன்றியோடு நினைவுகூர்வது. இது வாழ்விற்கு ஒரு பிடிமானத்தைத் தரும்.

நிகழ்கால இன்பவாதம்

எதிர்கால விளைவுகளைப் பற்றிக் கவலைப் படாமல், 'இன்றைய பொழுது இன்பமாக இருந்தால் போதும்' எனச் சிற்றின்பங்களிலும் உடனடித் தேவைகளிலும் மூழ்கியிருப்பது.

நிகழ்கால விதிவாதம்

'நடப்பது நடந்தே தீரும், நம் கையில் எதுவும் இல்லை' என விதியைச் சாடி, எவ்வித முயற்சியும் எடுக்காமல் செயலற்றுக் கிடப்பது.

எதிர்கால நோக்கு

வருங்கால இலக்குகளையும் வெற்றிகளையும் அடைய இப்போதே திட்டமிடுவது. இதற்காக நிகழ்காலத்தின் தற்காலிக சுகபோகங்களைத் தியாகம் செய்யும் மனப்பக்குவம் இதில் அடங்கும்.

கடந்த காலத்திற்கு அப்பாற்பட்ட எதிர்காலம்

இது உலக வாழ்க்கைக்கு அப்பாற்பட்டது. மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை அல்லது மறுமை வாழ்வின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு, அந்த நிரந்தர வெற்றிக்காக நடப்பு வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்வது[1] என்று கூறுவார்.

சீறாப்புராணம்: காப்பியக் கட்டமைப்பும் வரலாற்றுப் பின்னணியும்

இறைத்தூதர் நபிகள் நாயகம் (ஸல்) அவர் களின் புனித வரலாற்றைத் தமிழ் இலக்கிய மரபிற்கேற்ப உமறுப் புலவர் (கி.பி. 1642-1703) வடித்தெடுத்த ஒப்பற்ற காவியமே சீறாப்புராணமாகும். 'சீறா' (வரலாறு) மற்றும் 'புராணம்' (பழைய வரலாறு) எனும் சொற்களின் சேர்க்கையாக அமைந்த இந் நூல், நபிகளாரின் 57 வயது வரையிலான வாழ்வியல் நிகழ்வுகளை 5027 பாடல்களில் விவரிக்கிறது. வள்ளல் சீதக்காதி மற்றும் அபுல்காசிம் மரைக்காயர் ஆகியோரின் ஆதரவுடன் உருவான இக்காப்பியம் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டது.

விலாதத்துக் காண்டம்: நபிகளாரின் பிறப்பு, இளமைக்காலம், அவர்களின் நேர்மையான தொழில் முயற்சி மற்றும் கதீஜா நாயகியாரின் திருமண வாழ்வு உள்ளிட்ட 24 படலங்களை உள்ளடக்கியது - ஒரு மனிதனின் ஆளுமை உருவாகும் 'கடந்த கால' அடித்தளத்தை இது விளக்குகிறது.

நுபுவ்வத்துக் காண்டம்: நபிகளாருக்கு இறைச் செய்தி (வஹீ) அருளப்பட்டு 'நபிப் பட்டம்' பெற்ற நிகழ்வையும், மக்கத்துக் குறைகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் அவர்கள் காட்டிய பொறுமையையும் 21 படலங்களில் விவரிக்கிறது.

ஹிஜ்ரத்துக் காண்டம்: இஸ்லாமிய அறநெறி களைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் மக்காவை விட்டு மதீனாவிற்குப் புலம்பெயர்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை 47 படலங்களில் விளக்குகிறது.

கால உளவியல் நோக்கில் சீறாப்புராணம் - பகுப்பாய்வு

நேர்மறை கடந்த காலம்

கடந்த காலத்தின் இனிய நினைவுகள், குடும்பப் பெருமை, பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் முன்னோர்களின் நற்பண்புகளை நன்றியுணர்வோடு எண்ணிப் பார்ப்பதே 'நேர்மறை கடந்த காலம்' ஆகும். சிம்பார் டோவின் கோட்பாட்டின் படி இது, ஒரு மனிதனின் தற்போதைய மனவலிமைக்கும், எதிர்காலத் தன்னம்பிக்கைக்கும் வலுவான அஸ்திவாரமாக அமைகிறது.

சீறாப்புராணத்தில் இதற்கான மிகத் தெளிவான சான்று கதீஜா நாயகி (ரலி) அவர்களின் ஆறுதல் வார்த்தைகளில் காணப்படுகிறது. நபிகளாருக்கு வஹீ அருளப் பட்ட அந்நொடி அவர்கள் நடுங்கியவர்களாக வீடு திரும்பினார்கள். அந்த நெருக்கடியான நேரத்தில் கதீஜா நாயகி, 'நீங்கள் ஏழைகளுக்கு உதவுகின்றீர்கள், பிறர் மீது அன்பும் கருணையும் உடையவர்களாக இருக்கின்றீர்கள்' என கடந்த காலத்தின் நற்பண்புகளை அடிப்படையாக வைத்து அவர்களை ஆறுதல்படுத்தினார்கள்.

தாங்கு மெய்ப்பொரு ளறிவருள் குணந்தய
விரக்க நீங்கி டாதறம் பெருகிட
வளர்க்குநன் னெறியீ ரோங்கு மானிலத்
திடத்துறை பவர்களா லுமக்குத் தீங்கு
றாதென
வுரைத்தனர் மடந்தையர் திலகம்.[2]

என்கின்றார் உமறுப்புலவர்.

இந்த நேர்மறைகடந்த கால அடையாளங்கள் நபிகளாரின் சொல்லோடு ஒத்துப்போவதைக் கண்டு, கதீஜா நாயகி அதை ஒரு 'பேரின்பமாக' தன் உள்ளத்தில் இருத்திக் கொள்கிறார்கள். உமறுப் புலவர் இதை அழகுறப் பாடுகிறார்.

துணைவர் கூறிய மாற்றமு மறைகள்சொற்
றுவு மிணைப டுத்தி நேர்ந் தின்பமென்
றுளத்தினி லிருத்திப் பிணையை நேர்விழி
கனிமொழி சிறுபிறை நுதலா ரணையுந்
தம்வயின் றுனிபல வகற்றின ரன்றே. [3]

சிம்பார்டோவின் கோட்பாட்டுப் பின்னணியி நோக்கும்போது, இக்கட்டான சூழலில் ஒரு மனிதனைத் தளராமல் காப்பது அவனது நேர்மறையான கடந்த காலச் சிந்தனைகளே ஆகும். கதீஜா நாயகியின் ஆளுமைமிக்க இவ்வார்த்தைகள், நபிகளாரின் ஆன்மீக மற்றும் உளவியல் தரிசனத்திற்கு ஒரு பெரும் நங்கூரமாக நின்று தற்காலிகப் பதற்றத்தைத் துடைத்தெறிந்தன என்பது இங்கு உற்றுநோக்கத்தக்கது

எதிர்மறை கடந்த காலம்

சிம்பார்டோவின் கோட்பாட்டுப்படி, ஒரு மனிதன் தான் சந்திக்கும் கசப்பான அனுபவங்களை எப்படி எதிர்கொள்கிறான் என்பதே அவனது உளவியல் முதிர்ச்சியைக் காட்டுகிறது. சீறாப்புராணத்தின் பருப்பதராச னைக் கண்ணுற்ற படலம் இதனைத் தெளிவாகப் படம்பிடிக்கிறது.

நபித்துவத்தின் பத்தாவது ஆண்டில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயி◌ஃப் நகருக்குத் தனியே சென்று, அங்குள்ள தலைவர்களிடம் இஸ்லாமிய அழைப்பை முன்வைத்தார்கள். ஆனால், அவர்கள் புறக்கணிக்கப்பட்டார்கள்; கற்களால் துரத்தப்பட்டார்கள்; அவர்களின் பாதங்கள் இரத்தக் கறை படிந்தன. சிறுவர்களையும் அடிமைகளையும் ஏவி அவர்களை ஏளனம் செய்தனர். உமறுப் புலவர் இந்த வலிமிகு தருணத்தை பாடுகிறார்:

சவிகொள் வெண்சுதை மாமதிள் தாயிபி
லிபுனு அபுது யாலிலென் றிடும்பெயர்க்
குறைசியென் பவனை நபிக ணாயகங்
கண்டன ரவனெதிர் நடந்து குவிகை
கொண்டுபின் னிவரொடு மனைகுறு கினனே[4]

புறக்கணிப்பின் வலியிலும் நபிகளார் உடைந்து போகவில்லை. அந்தத் திராட்சை தோட்டத்தின் நிழலில் அமர்ந்து அவர்கள் இறைவனிடம் கேட்ட பிரார்த்தனை, ஒரு 'எதிர்மறை கடந்த காலம்' மனிதனை எவ்

விதம் நிலைப்படுத்த முடியும் என்பதற்கான மிகச்சிறந்த உளவியல் சான்றாகும்:

"அல்லாஹ்வே! எனது ஆற்றல் குறைவையும் எனது திறமைக் குறைவையும் மனிதர்களிடம் நான் மதிப்பின்றி இருப்பதையும் உன்னிடமே முறையிடுகிறேன்... உனக்கு என்மீது கோபம் இல்லையானால் இந்தக் கஷ்டங்களையெல்லாம் நான் பொருட் படுத்தவே மாட்டேன்."[5] என்ற நபிகளாரின் வேண்டுதலை குறிப்பிடுவார் அப்துல் ஜப்பார்.

இந்த வேண்டுதல் அவர்களுக்கு முன் செல்லும் உந்துவிசையை வழங்கியது. மலக்குல் ஜிபால் 'மலைகளால் இவர்களை நசுக்கட்டுமா?' என்று கேட்டபோது நபிகளார் 'வேண்டாம்; அவர்களிலிருந்து நல்லவர்கள் வருவார்கள்' என்று கூறினார்கள்-இது எதிர் மறை கடந்த கால அனுபவத்தை எதிர்காலக் கனவுகளின் ஒளிக்கீற்றாக மாற்றிய ஒரு தனித்துவமான உளவியல் மாற்றமாகும்.

நிகழ்கால இன்பவாதம்

'இன்றைய இன்பமே வாழ்க்கையின் இலக்கு' என்ற எண்ணப்போக்கை அடிப்படையாகக் கொண்ட மனநிலையே நிகழ்கால இன்ப வாதம் ஆகும். இம்மனப்பாங்கைக் கொண்ட வர்கள் கடந்த காலத்தின் அனுபவங்களிலி ருந்து பாடம் கற்றுக்கொள்வதிலும், எதிர்கால விளைவுகளைப் பற்றிச் சிந்திப்பதிலும் பெரிதும் அக்கறை செலுத்துவதில்லை. உடனடி மகிழ்ச்சியை அளிக்கும் போதை, சூதாட்டம், பயனற்ற பொழுதுபோக்குகள் போன்றவற்றில் ஈடுபடுவதன் மூலம் கணநேர இன்பத்தை நாடுகின்றனர். ஆனால் அவற்றின் நீண்டகால தனிநபர் மற்றும் சமூக விளைவுகளை உணரத் தவறுகின்றனர்.

இத்தகைய மனநிலையின் சமூக வெளிப் பாடுகளைச் சீறாப்புராணம் அரபுச் சமூகத்தின் மது மற்றும் சூதாட்டப் பழக்க வழக்கங்களைச் சித்திரிக்கும் இடங்களில் தெளிவாகப் பதிவு செய்கிறது.

மட்டு வாய்வயி றாரவுண் டெண்ணிலா மள்ளர்

கொட்டு வாங்கியே யிருபுயங் குலுங்கிடக் கரண்கள்

வெட்டு வார்சிலர் மென்கரத் தேந்தியே வரம்பு

கட்டு வாரடைப் பார்திசை தொறுங்கணக் கிலையே[6]

இந்த மனப்போக்கிற்கு நேர்மாறான வாழ்வியல் நெறியைத் திருக்குர்ஆன் வலியுறுத்துகிறது:

நம்பிக்கை கொண்டோரே! மது, சூதாட்டம் ஆகியவை அருவருப்பானதும் சைத்தானின் செயல்களுமாகும். எனவே அவற்றிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்; நீங்கள் வெற்றி பெறுவீர்கள்." (திருக்குர்ஆன் 5:90)

மேலும், மதுவை அன்பளிப்பாக வழங்கியவ ரிடம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "மதுவை அருந்துவதற்கு தடை விதித்த இறைவனே அதை விற்பதற்கும் தடை விதித்துள்ளான்" என்று கூறியதாக ஹதீஸ் பதிவுகள் எடுத்துரைக்கின்றன (முஸ்லிம்: 3220).

சிம்பார்டோவின் காலநோக்குக் கோட்பாட்டின் அடிப்படையில் இந்நிலையை ஆராயும்போது, நிகழ்கால இன்பவாத மனப்போக்கை இஸ்லாம் திட்டவட்டமாக மறுத்து, பொறுப்பு உணர்வும் எதிர்கால விழிப்புணர்வும் கொண்ட வாழ்க்கை முறையை உருவாக்கியுள்ளது என்பது புலனாகிறது. இதுவே இஸ்லாமிய சமூகத்தின் ஒழுக்கநெறி மற்றும் சமூக ஒருமைப்பாட்டிற்கான உளவியல் அடித் தளமாகவும் அமைகிறது.

நிகழ்கால விதிவாதம்

'நடப்பது நடந்தே தீரும், நம் கையில் எதுவும் இல்லை' என்று செயலற்றுக் கிடக்கும் மனநிலையே நிகழ்கால விதி வாதம் ஆகும். ஏழாம் நூற்றாண்டு அரபுச் சமூகம் இந்த விதிவாத மனநிலையின் மிகக் கடுமையான வெளிப்பாட்டை பெண் குழந்தைகளைக் கொலை செய்வதிலும், கடவுளின் திருப்திக்காக பலியிடுவதிலும் வெளிப்படுத்தியது.

'இப்படித்தான் நடந்துவருகிறது, இனியும் இப்படித்தான் நடக்கும்' என்ற ஒரு சமூகத்தின் ஆழமான விதிவாதத்தை உடைத்த நபிகளாரின் வருகையை உமறுப் புலவர் இவ்வாறு பாடுகிறார்:

பானுவின் கதிரால் இடருறுங் காலம் படர் தரு தருநிழல் எனலாய் ஈனமுங்

கொலையும் விளைத்திடும் பவ நோய் இடர் தவிர்த்திடும் அருமருந்தாய்த் தினெனும்

பயிருக்கோர் செழுமழை எனலாய்க்

குறைஷியர் திலதமே எனலாய் மானிலந்

தனக்கோர் மணிவிளக் கெனலாய் முகம்மது நபி பிறந்தனரே[8]

'ஈனமும் கொலையும் விளைத்திடும் பவ நோய்க்கு அருமருந்து' என்ற வரி மிகவும் குறிப்பிடத்தக்கது. நிகழ்கால விதிவாத சமூகம் 'நாங்கள் இப்படித்தான் வாழ்கிறோம்' என்று நம்பிக்கையற்று இருந்த அந்நேரத்தில், நபிகளாரின் பிறப்பே அந்த விதிவாதத்திற்கு எதிரான ஒரு புதிய கால உணர்வை - மாற்றம் சாத்தியம் என்ற நம்பிக்கையை விதைத்தது.

எதிர்கால நோக்கு

இன்று நான் செய்யும் செயல், நாளை எனக்குப் பயன் தர வேண்டும்' என்ற தொலைநோக்குப் பார்வையுடன் வாழும் இந்த மனநிலை கொண்டவர்கள் நிகழ் காலத்தின் தற்காலிகச் சுகங்களை விட எதிர்காலத்தின் நிரந்தர வெற்றிக்கே முன்னுரிமை கொடுப்பார்கள்.

சீறாப்புராணத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத் (இடம்பெயர்தல்) முடிவு இந்த எதிர்கால நோக்கு மனநிலையின் உச்சகட்ட வெளிப்பாடாகும். மக்காவில் துன்பங்கள் அதிகரித்த போது, உணர்ச்சி வசப்பட்டுப் போர் புரியாமல், இஸ்லாமிய அரசு அமைய மதீனா எனும் பாதுகாப்பான நிலத்தைத் தேர்ந்தெடுத்தது ஒரு மாபெரும் எதிர்காலத் திட்டமிடல்.

எதிர்கால வெற்றிக்காகத் தனது பிறந்த மண், உறவுகள் மற்றும் சொத்துக்களைத் துறந்து சென்றது 'உடனடி இன்பத்தை ஒத்திவைக்கும் மனநிலை (Delayed Gratification)"எனும் உளவியல் நிலைக்குச் சான்றாகும்.

மங்குலிற் சுழலுந் துவசநீண் மாட மதீனமா நகானி லுறைந்து வெங்குபீர் கடிந்து

பீஸபீல் செய்ய மேலவன் விதித்தன னென்ன விங்கிவ ருரைத்த மாற்றமு மனத்தி

னெண்ணிய நினைவுமொன் றாச்சென்னறங்கமு மகமு முவகையிற் குளிப்ப அகுமதி

யாத்திரைக் கியைந்தார்[9]

'மனத்தின் எண்ணிய நினைவும் ஒன்றாகி அகமும் முகமும் உவகையில் குளிப்ப' என்ற வரி மிகவும் குறிப்பிடத்தக்கது. ஒரு எதிர்காலநோக்குடைய மனிதனுக்கு மட்டுமே இத்தகைய இழப்புகளை மனமகிழ்வோடு ஏற்கும் ஆற்றல் இருக்கும். சிம்பார்டோவின் கோட்பாட்டுப்படி, இந்த மனநிலைதான் ஒரு சமூகத்தைச் சாதனை நோக்கி இட்டுச் செல்கிறது.

கடந்த காலத்திற்கு அப்பாற்பட்ட எதிர்காலம்

சிம்பார்டோவின் ஆறாவது மற்றும் மிக முக்கியமான பரிமாணம் இதுவே. இது லௌகீக வாழ்க்கைக்கு அப்பால், மரணத்திற்குப் பிந்தைய 'மறுமை' வாழ்வின் மீது நம்பிக்கை கொள்வதைக் குறிக்கிறது. சீறாப்புராணத்தின் ஒவ்வொரு பாடலிலும் இக்கோட்பாடு இழையோடுகிறது என்பதை உமறுப் புலவரின் முதல் பாடலிலிருந்தே காணலாம்.

நம்மையா ளுடையான் வேத நபிதிரு வசனந் தீனோர்சம்மதித் திடப்பா ரெல்லாந்

தழைக்கவே விளக்கஞ் செய்தோரிம்மையு மறுமை யும்பே றிலங்கிய சதக்கத்

துல்லாசெம்மல ரடியி ரண்டுஞ் சிந்தையி லிருத்தி னேனே[10]

'இம்மையும் மறுமையும் பேறு' என்ற வரி கடந்த காலத்திற்கு அப்பாற்பட்ட எதிர்காலம் கோட்பாட்டின் சாரமாகும். இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது, மறுமை வாழ்வே நிரந்தரமானது என்ற கருத்தை உமறுப் புலவர் அழுத்தமாகப் பதிவு செய்கிறார். **திருக்குர்ஆன் இதை வலியுறுத்துகிறது.**

இவ்வுலக வாழ்க்கை வெறும் விளையாட்டும் பொழுதுபோக்கும் மட்டுமே. மறுமையின் இல்லம்தான் உண்மையான வாழ்க்கை; அவர்கள் அறிந்திருந்தால்![11]

'நாளை இறைவனிடம் பதில் சொல்ல வேண்டும்' என்ற அச்சமும் நம்பிக்கையும், ஒரு மனிதனின் நிகழ்கால நடத்தையை சீராக்குகிறது என்பதை நபிகளாரின் வாழ்வே நிரூபிக்கிறது. தாயிஃபில் கல்லெறிந்தவர்க ளுக்குப் பதிலடி கொடுக்காமல் 'அவர்களிலி ருந்து நல்லவர்கள் வருவார்கள்' என்று ஆதரவு வைத்தது; பல ஆண்டுகள் வாடாமல் தொடர்ந்து தன் பணியைச் செய்தது இவை அனைத்தும் கடந்த காலத்திற்கு அப்பாற்பட்ட எதிர்கால நம்பிக்கையால் இயங்கிய ஒரு உளவியல் வலிமையின் வெளிப்பாடுகளே.

முடிவுரை

பிலிப் சிம்பார்டோவின் கால உளவியல் கோட்பாட்டின் ஆறு பரிமாணங்களையும் சீறாப்புராணத்தில் தெளிவாகவும், ஆழமாக வும் காண முடிகிறது என்பதே இவ்வாய்வின் முதன்மையான கண்டுபிடிப்பாகும்.

நேர்மறை கடந்த காலம்-கதீஜா நாயகியின் ஆறுதலிலும், வஹீ அனுபவத்தின் நினைவிலும் காணப்படுகிறது.

எதிர்மறை கடந்த காலம் - தாயிஃப் துன்பங்களில் வெளிப்பட்டாலும், நபிகளார் அதை இலக்கை அடையத் தூண்டும் உளவியலாக மாற்றியதில் காப்பியத்தின் தனிப்பட்ட பங்களிப்பு நிலைக்கிறது.

நிகழ்கால இன்பவாதம்-அரபுச் சமூகத்தின் மது மற்றும் சூதாட்டப் பழக்கங்களிலும், அதற்கு நேரடியாக எதிர்ப்பு தெரிவிக்கும் குர்ஆனின் வழிகாட்டுதலிலும் காட்டப் படுகிறது.

நிகழ்கால விதிவாதம்-பெண் குழந்தைகளைக் கொல்லும் சமூகத்திலும், அதை உடைக்கும் நபிகளாரின் புரட்சியான அணுகுமுறையிலும் வெளிப்படுகிறது.

எதிர்கால நோக்கு-ஹிஜ்ரத்தின் திட்டமிடலி லும், மதீனா ஒப்பந்தத்திலும் உச்சகட்டமடை கிறது.

கடந்த காலத்திற்கு அப்பாற்பட்ட எதிர்காலம்-காப்பியம் முழுவதும் ஊடாடும் மறுமை நம்பிக்கையிலும், 'இம்மையும் மறுமையும் பேறு' என்ற கவிஞரின் அறிவிப்பிலும் சுடர் விடுகிறது.

உமறுப் புலவர் வெறும் வரலாற்றை பதிவு செய்யவில்லை; மனிதமனதின் கால உணர்வுகளையும் அவற்றின் விளைவுகளை யும் கலைநயத்துடன் ஆவணப்படுத்தி யுள்ளார். 17ஆம் நூற்றாண்டு தமிழ் கவிஞனும் 20ஆம் நூற்றாண்டு உளவியலா ளனும் ஒரே உண்மையை வெவ்வேறு மொழிகளில் சொல்கிறார்கள் என்பதே இந்த ஆய்வின் ஆழமான முடிவாகும். தமிழ் இலக்கிய மரபும் இஸ்லாமிய ஆன்மீக விழுமியங்களும் நவீன உளவியல் அறிவியலும் ஒன்றிணையும் இடத்தில் நிற்கிறது சீறாப்புராணம். இது ஒரு வரலாற்று நூல் மட்டுமன்று; கால உளவியலின் ஒரு அரிய பெட்டகமாகும்.

சான்றெண் விளக்கம்

1. Philip zimbardo, The Time Paradox . Page ,52.
2. கே.வி. செய்குத்தம்பி பாவலர், சீறாப்புராணம் மூலமும் உரையும் (முதல் பாகம்) ப,492.
3. மேலது, ப,491.
4. மேலது ப,823.
5. N.B. அப்துல் ஜப்பார்,B.A, நபி பெருமானார் வரலாறு, ப, 113.
6. கே.வி. செய்குத்தம்பி பாவலர், சீறாப்புராணம் மூலமும் உரையும் (முதல் பாகம்) ப,28.
7. சங்கை மிக்க குர்ஆன் மற்றும் தமிழ் மொழியில் அதன் கருத்துகளின் மொழிபெயர்ப்பு, ப,124.
8. கே.வி. செய்குத்தம்பி பாவலர், சீறாப்புராணம் மூலமும் உரையும் (முதல் பாகம்) ப,114.
9. கே.வி. செய்குத்தம்பி பாவலர், சீறாப்புராணம் மூலமும் உரையும் (இரண்டாம் பாகம்) ப,63.
10. கே.வி. செய்குத்தம்பி பாவலர், சீறாப்புராணம் மூலமும் உரையும் (முதல் பாகம்) ப,17.
11. சங்கை மிக்க குர்ஆன் மற்றும் தமிழ் மொழியில் அதன் கருத்துகளின் மொழிபெயர்ப்பு, ப,405.

துணைநூற் பட்டியல்

1. செய்குத் தம்பி பாவலர்,சீறாப்புராணம் (மூலமும் மொழிப்புரையும்), முதல் பாகம், மாஹின் பிரிண்டர்ஸ், 29, அப்பு மேஸ்திரி தெரு, சென்னை -600 001 முதற் பதிப்பு : மே 1999
2. செய்குத் தம்பி பாவலர், சீறாப்புராணம் (மூலமும் மொழிப்புரையும்),இரண்டாம் பாகம், மாஹின் பிரிண்டர்ஸ், 29, அப்பு மேஸ்திரி தெரு, சென்னை -600 001 முதற் பதிப்பு : மே 1999
3. கலாநிதி. ஸாதியா பௌஸர்-சீறாப்புராணம் வரலாறும் புனைவும், எக்ஸலன்ட் பப்ளிகேஷன், இல:478, அலிம் வீதி, சாய்ந்தமருது -16, இலங்கை, முதற்பதிப்பு:2020
4. Zimbardo, P., & Boyd, J. (2008). The Time Paradox: The New Psychology of Time That Will Change Your Life*. New York: Free Press.